# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 21 வள்ளுவர் ஆண்டு 2037 ஆவணி 21 புதன்கிழமை (06.09.2006) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 281




## யாழ்.குடாநாட்டில் பட்டினிச்சாவை தவிர்க்க ஓரிரு கப்பல்களையாவது அனுமதியுங்கள்



### யாழ்.ஆயர் விடுதலைப் புலிகளின் தலைவரிடம் அவசர கோரிக்கை

யாழ்ப்பாணம்,செப்.6

குடாநாட்டில் பட்டினிச்சாவை தவிர்ப்பதற்காக ஓரிரு உணவுக் கப்பல்களையாவது மனிதாபிமான ரீதியில் அனுமதிக்கும்படி விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனிடம் யாழ்.ஆயர் அதிவண. தோமஸ் சௌந்தரநாயகம் அவசர கோரிக்கை ஒன்றை விடுத்துள்ளார்.

அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் ஊடாக ஆயர் விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனுக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

யாழ். அரச அதிபரின் அறிக்கைப் பிரகாரம் கையிருப்பில் உள்ள உணவுப் பொருள்கள் இன்னும் ஐந்தே நாள்களில் முடிவடைந்து விடும். இப்பொழுது கொழும்புத் துறைமுகத்தில் யாழ். மக்களுக்கென உணவுப் பொருள்களை ஏற்றிக்கொண்டிருக்கும் கப்பல் ஓரிரு நாள்களில் புறப்படாவிடில்(06 ஆம் பக்கம் பார்க்க)

# இணைத் தலைமைக்கு அறிவித்துவிட்டே சம்பூரைக் கைப்பற்ற அரசு இறங்கியது

### காக்கை தீவில் ஷெல்கள் வீழ்ந்தன

யாழ்ப்பாணம், செப்.6

யாழ். நகருக்கு வடமேற்காக காக்கைதீவு கரையோரப் பகுதிகளில் நேற்றுமாலை ஷெல்கள் வீழ்ந்தன என்று கூறப்படுகிறது.

ஷெல்கள் வீழ்ந்து வெடித்ததை அடுத்து (06 ஆம் பக்கம் பார்க்க)

### சம்பூரில் சிப்பாய் பலி

கொழும்பு, செப்.6

சம்பூருக்கு அருகிலுள்ள கிராமப்புறப் பகுதியொன்றில் நேற்று புலிகளின் மோட்டார் தாக்குதலுக்கு இலக்காகி சிப்பாய் ஒருவர் உயிரிழந்தார்; மற்றும் நான்கு பேர் (06 ஆம் பக்கம் பார்க்க)



## பாதுகாப்புப் பேச்சாளர் அமைச்சர் ரம்புக்வெல தெரிவிப்பு

கொழும்பு, செப்டெம்பர் 6

**திருகோணமலைத் துறைமுகத்தை விடுதலைப்புலிகளிடமிருந்து காப்பாற்றுவதற்காகவே சம்பூரை அரசு கைப்பற்றியது. சர்வதேச நாடுகள் மற்றும் இலங்கைக்கு உதவி வழங்கும் இணைத்தலைமை நாடுகளை நன்கு அறிவுறுத்திய பின்னரே அரசு சம்பூரை மீட்கும் முயற்சியில் இறங்கியது.**

**- இவ்வாறு நேற்றுக் கூறினார் அமைச்சரும், பாதுகாப்பு விவகாரங்களுக்கான பேச்சாளருமான கெஹலிய ரம்புக்வெல.**

கொள்ளுப்பிட்டி கிராமோதய நிலையத்தில் நேற்றுக்காலை நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டின் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். அங்கு அவர் மேலும் கூறியதாவது:-

சம்பூர் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்தால் அது திருகோணமலைத் துறைமுகத்திற்கு பெரும் ஆபத்தாகவே இருக்கும். சர்வதேச நிறுவனங்கள் திருகோணமலை துறைமுகத்தில் இயங்குகின்றன. அவற்றைப் பாதுகாக்க வேண்டியது அரசின் கடமை.

(06 ஆம் பக்கம் பார்க்க)

## முழு அளவில் யுத்தம் வெடித்தால்தான் வலுச்சமநிலையை பரிசோதிக்க முடியும்



### யுத்த நிறுத்தகால சண்டைகளில் அதை எதிர்பார்க்கக்கூடாது என்கிறார் புலிகள் பிரமுகர்

கிளிநொச்சி.செப்.6

தற்போது நடைபெறுகின்ற சண்டைகள் - மோதல்களில்- வலுச் சமநிலையைப் பரிசோதிக்க முடியாது. அதை நிரூபிக்கவும் முடியாது. அப்படி எதிர்பார்ப்பதும் தவறானது.

யுத்த நிறுத்தத்தைக் கடந்து முழு அளவிலான யுத்தம் ஏற்படுகின்றபோதுதான் யுத்தத்துக்கான உபாயங்களைப் பிரயோகிக்க முடியும்.

- இப்படிக் கருத்து வெளியிட்டிருக்கிறார் விடுதலைப்புலிகளின் அரசியல் ஆய்வு மையப் பொறுப்பாளர் கவியழகன்.

தமிழீழத் தேசியத் தொலைக்காட்சியில் ஒளிபரப்பான 'நிலவரம்' நிகழ்ச்சியில் கலந்து கொண்ட போது அவர் இந்தக் கருத்தை வெளியிட்டார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியதாவது:-

இதுவரை காலம் நடந்த நிகழ்வுகளுக்கும் சம்பூர் இராணுவ நடவடிக்கைக்கும் பாரிய வேறுபாடு உண்டு.

யுத்த நிறுத்த ஒப்பந்தத்தில் வகுக்கப்பட்ட எல்லைகளுக்குட்பட்டுத்தான் இதுவரையான நிகழ்வுகள் நடந்தன. அந்த எல்லைகளை உடைத்து மீள் நிர்மாணம் செய்யக்கூடிய எந்த ஒரு அசம்பாவிதமும் நடக்கவில்லை.

ஆனால், இந்த நடவடிக்கையின் அடிப்படையே வேறுபாடானது. யுத்தநிறுத்த ஒப் (06 ஆம் பக்கம் பார்க்க)

## சம்பூருக்கு அப்பாலும் அரசுப் படைகள் நகர்வு

திருகோணமலை, செப்.6

திருகோணமலையில் சர்ச்சைக்குரிய சம்பூர் கிராமத்தை கைப்பற்றும் நோக்கில் முன்னேறிய படையினர் நேற்றுப் பிற்பகல் சம்பூரையும் தாண்டி வடக்கே பவுல் முனைபகுதி வரை நகர்ந்துள்ளனர் என்று அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவித்தன.

அரசுப் படைகள் பவுல் முனைப் பகுதியில் உள்ள வெளிச்சவீடுவரை முன்னேறிச் சென்றுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

பவுல்முனை வெளிச்சவீடு பகுதியில் துருப்பினர் நிலைகொண்டிருக்கும் படங்களைப் பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் வெளியிட்டிருக்கிறது.

இதேவேளை - (06 ஆம் பக்கம் பார்க்க)

## படையினர் பயணம் செய்த பஸ் மீது நீர்வேலியில் கிளைமோர் தாக்குதல்

### ஒரு சிப்பாய் பலி! 12 பேர் காயம்

யாழ்ப்பாணம், செப்.6

நீர்வேலி பகுதியில் நேற்றுப் பிற்பகல் நடத்தப்பட்ட கிளைமோர்த் தாக்குதலில் இராணுவச் சிப்பாய் ஒருவர் உயிரிழந்தார்; 12 படையினர் காயமடைந்தனர்.

படையினர் பயணம் செய்த பஸ் வண்டி ஒன்றை இலக்குவைத்து நீர்வேலி மாசிவன் சந்திக்குச் சமீபமாக வைத்து இத் தாக்குதல் நடத்தப்பட்டது என்று கூறப்படுகிறது.

சம்பவம் நடந்த பின்னர் அப் பகுதியில் இராணுவத்தினர் வேட்டுக்களைத் தீர்த்தனர். இதனால் பெரும் பதற்றம் ஏற்பட்டது. ஊரடங்கு தளர்த்தப்பட்டிருந்த சமயத்தில் இத் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கிறது.

யாழ்ப்பாணத்தில் கடந்த இரு தினங்களாக பகல் முழுவதும் 12 மணிநேரத்துக்கு ஊரடங்கு தளர்த்தப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (ஐ - 1)

## தமிழர் புனர்வாழ்வுக் கழக வங்கிக் கணக்குகளை 6 மாதங்கள் முடக்கி வைக்க மேல் நீதிமன்றம் அனுமதி!

கொழும்பு, செப்.6

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் வங்கிக் கணக்குகளை ஆறு மாத காலம் முடக்கி வைப்பதற்கான அனுமதியை கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று வழங்கியிருக்கின்றது.

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் வங்கிக் கணக்குகளை முடக்கி வைப்பதற்கான அனுமதி கோரும் மனு ஒன்றை சட்டமா அதிபர் நேற்றுமுன்தினம் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் சமர்ப்பித்திருந்தார். இந்த மனு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது மேல் நீதிமன்ற நீதிபதி உபாலி அபேரட்ண இந்த அனுமதியை வழங்கினார்.

சட்ட மா அதிபர் திணைக்களத்தின் சார்பில் பிரதி சொலிசிட்டர் ஜெனரல் புவனகே அலுவிஹார ஆஜரானார். தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் பெயரால் புலிகள் நிதிகளைக் கையாண்டு வருகின்றனர் எனவும் இது ஆபத்தான நிலையென்றும் அவர் நீதிமன்றத்தில் (06 ஆம் பக்கம் பார்க்க)

## முகமாலையில் தரித்துநிற்கும் வாகனங்களின் உரிமையாளரை இன்று கொடிகாமம் வர அழைப்பு

யாழ்ப்பாணம், செப்.6

முகமாலை சோதனை நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்ட வாகனங்களின் உரிமையாளர்களை இன்று முற்பகல் 10 மணிக்கு கொடிகாமம் பொலீஸ் நிலயத்துக்கு வருமாறு கேட்கப்பட்டுள்ளது.

குடாநாட்டுக்குப் பொருள்களை ஏற்றிவந்த அறுபதுக்கும் அதிகமான லொறிகள் கடந்த மாதம் 11ஆம் திகதி முகமாலையில் படையினரால் தடுத்து நிறுத்தப்பட்டிருந்தன.

அதன் பின்னர் அந்தப் பகுதியில் மோதல் வெடித்ததால் வாகன உரிமையாளர்கள் வாகனங்களை யாழ்ப்பாணத்துக்கு எடுத்துவர (06 ஆம் பக்கம் பார்க்க)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# பொருள் தட்டுப்பாடு, விலை அதிகரிப்பு; பல வகையிலும் மக்கள் பெரும் கஷ்டம்

கல்வியங்காடு,செப்.6

கொழும்பிலிருந்து கப்பல் மூலம் யாழ். குடாநாட்டுக்கு அண்மையில் குறிப்பிட்ட அளவு பொருள்கள் வந்தபோதும் யாழ். குடாநாட்டின் சில பிரதேசங்களில் பொருள்களுக்கு தற்போதும் பெரும் தட்டுப்பாடு நிலவுவது தெரியவந்துள்ளது. கைவசம் உள்ள பொருள்களை வியாபாரிகள் மிகவும் விலை கூட்டி விற்பதாகக் கூறப்படுகிறது.

திருநெல்வேலி, கல்வியங்காடு போன்ற பகுதிகளில் அமைந்துள்ள கடைகளில் இந் நிலைமையை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. குறிப்பாக பால்மாவகை, பிஸ்கற், கோதுமைமா, சீனி மற்றும் மருந்துப் பொருள்களின் விலைகளும் சோடா போன்ற மென்பானங்களின் விலைகளும் மிக அதிகரித்துள்ளன.

பொருள்களை நியாய விலைகளுக்கு விற்கும்படி யாழ்.அரச அதிபர் அறிவுறுத்தியும் சில வியாபாரிகள் அதை உதாசீனம் செய்துவருவதாக கூறப்படுகின்றது. வறுமை நிலையிலுள்ள மக்கள் இதனால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இது இவ்வாறிருக்க பொருள்களின் விலை ஏற்றம் தொடர்பாக தட்டிக் கேட்கும் மக்கள் மீது சில வர்த்தகர்கள் சீறிப் பாய்வதாகவும் இதனால் வேறுவழியின்றி அவர்கள் நிர்ணயிக்கும் விலைகளுக்கே பொருள்களைக் கொள்வனவு செய்யும் நிலை ஏற்பட்டுள்ளதாகவும் விசனம் தெரிவிக்கப்படுகின்றன. யாழ்ப்பாணத்திலுள்ள பல உணவுச்சாலைகளில் சிற்றுண்டிகள், தேநீர் போன்ற உணவுப் பொருள்களின் விலைகளும் அதிகரித்துக் காணப்படுகின்றன.

யாழ்.பல்கலைக்கழக சுற்றாடலில் வசிக்கும் வெளிமாவட்ட மாணவர்கள் இந்த நிலைமையால் பெரிதும் பாதிக்கப்பட்டிருப்பதாகத்தெரியவருகின்றது. (ப-79)

# மோட்டார் வாகனப் பதிவுகள் பரவலாக நடைபெறுகின்றன

யாழ்ப்பாணம்,செப்.6

யாழ்.குடாநாட்டில் மோட்டார் சைக்கில்கள் மற்றும் வாகனங்கள் பதிவு செய்யும் நடவடிக்கைகளை இராணுவத்தினர் பரவலாக மேற்கொண்டு வருகின்றார்கள்.

சில பிரதேசங்களில் இராணுவத்தினர் வீடு வீடாகச் சென்று மோட்டார் சைக்கிள்கள், வாகனங்களை பார்வையிட்டு பதிவு செய்துகொண்டு செல்வதுடன் குறிப்பிட்ட தினத்தில் முகாமிற்கு வந்து உறுதிப்படுத்திய கடிதங்களைப் பெற்றுக்கொள்ளும்படியும் கூறிச்சென்றுள்ளார்கள்.

இன்னும் சில இடங்களில் இராணுவ முகாம்களுக்கு உரியவர்கள் அழைக்கப்பட்டு உடனடியாக ஆவணங்கள் பார்வையிடப்பட்டு உறுதிப்படுத்திய கடிதங்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

இத்தகைய நடவடிக்கைகளினால் வேறு நபர்கள் வாகனங்களைக் கொண்டு செல்லும் நிலைமைகள் கட்டுப்படுத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். (ப-68)

# தீவக மக்களுக்கான உலர் உணவு முற்றாகத் தீர்ந்துபோகும் நிலை

யாழ்ப்பாணம்,செப்.6

தீவகப் பகுதி மக்களுக்குத் தேவையான உலர் உணவு முற்றாகத் தீர்ந்துபோகும் நிலையில் உள்ளது.

யாழ். குடாநாட்டில் இருந்து தீவகத்திற்கு எடுத்துச்செல்லும் உலர் உணவுகள் முழுமையாக எடுத்துச்செல்ல முடியாத நிலை காரணமாகவே இந்த அவல நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குழந்தைகளுக்கான பால்மா, மரக்கறி, பருப்பு மற்றும் தானியங்கள் என்பன அங்கு முற்றாகத் தீர்ந்துள்ளன.

இதேவேளை, அரச நிறுவனங்கள், உள்ளூராட்சி சபைகள் என்பன ஊரடங்கு உத்தரவினால் முழுமையாக இயங்கமுடியவில்லை.

குடிதண்ணீருக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவுகிறது. அத்துடன், ஊரடங்கு தளர்த்தப்படும் வேளைகளில் நெடுந்தூரம் சென்றே மக்கள் குடிதண்ணீர் பெறுகின்றனர்.

மேலும்,கடந்த ஒரு மாத காலத்திற்கு மேலாக கிணறுகளில் உள்ள நீர் வற்றியுள்ளதனால் பெரும் தண்ணீர் கஷ்டம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ப-95)

## தீவக வைத்தியசாலைகள் தொடர்ந்து இயங்குகின்றன

யாழ்ப்பாணம், செப்.6

யாழ்.தீவகத்தில் அமைந்துள்ள வேலணை கிராமிய வைத்தியசாலை, புங்குடுதீவு மாவட்ட வைத்தியசாலை, ஊர்காவற்றுறை மாவட்ட வைத்தியசாலை மற்றும் நயினாதீவு - அனலைதீவு பிரிவுகளுக்குரிய வைத்தியசாலைகள் தொடர்ந்தும் இயங்கி வருவதாக யாழ்.பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் அலுவலகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

வேலணை கிராமிய வைத்தியசாலையில் நிறுத்தப்பட்டிருந்த நோயாளர்களுக்கான அம்புலன்ஸ் வாகனம் பாதுகாப்பைக் கருத்திற்கொண்டு ஊர்காவற்றுறை மாவட்ட வைத்தியசாலையில் தற்காலிகமாக வைக்கப்பட்டுள்ளதாக இவ் வைத்தியசாலையின் பொறுப்பு வைத்திய அதிகாரி ஆ.திருநாவுக்கரசு தெரிவித்தார். (ப-51)

# நிவாரணம் எதுவும் இல்லாமல் கஷ்டமுறும் யாழ்.கரையோர மக்கள்

## பட்டினியை எதிர்நோக்கும் நிலைமை

யாழ்ப்பாணம், செப்.6

குடாநாட்டில் தற்போது நிலவிவரும் அசாதாரண சூழ்நிலையால் இடம்பெயர்ந்துள்ள யாழ்.பிரதேச கரையோர மக்களுக்கு நிவாரணம் எதுவும் இதுவரை கிடைக்கவில்லை யென்று கூறப்படுகின்றது.

கடந்த 11 ஆம் திகதி முதல் யாழ்ப்பாணத்தில் நிலவிவரும் அசாதாரண சூழ்நிலையால் கொழும்புத்துறை, பாஷையூர், குருநகர் ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த குடும்பங்கள் அனைத்தும் இடம்பெயர்ந்து ஆலயங்கள், பாடசாலைகள் மற்றும் உறவினர்கள், நண்பர்கள் வீடுகளில் தங்கியுள்ளனர்.

இக்குடும்பங்கள் இடம்பெயர்ந்து 4 வாரங்களுக்கு மேலாகியும் நிவாரணம் எதுவும் வழங்கப்படவில்லை. முற்று முழுதாகக் கடற்றொழிலையே நம்பி வாழ்ந்த இவர்களின் தொழில் நடவடிக்கையும் தடை செய்யப்பட்டுள்ளது. வருமானமுமின்றி, நிவாரணமுமின்றி மக்கள் பெரும் கஷ்டத்தை எதிர் கொள்கின்றனர்.

இந்த விடயத்தில் அதிகாரிகள் அக்கறை எடுத்து உடன் செயற்படாவிடில் இம் மக்கள் பட்டினியால் வாடும் நிலைக்குத் தள்ளப்படுவர் என்று அஞ்சப்படுகின்றது. (ப-202)

## ஆவரங்காலில் குடும்பஸ்தர் சுட்டுக்கொலை

யாழ்ப்பாணம்,செப்.6

ஆவரங்காலில் நேற்று முன்தினம் மாலை 5.45 மணியளவில் தையல் கடை நடத்தும் ஒருவர் இனந்தெரியாத ஆயுததாரிகளால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

கிருஷ்ணன் லோகநாதன்(வயது-51) என்பவரே கொல்லப்பட்டவராவார்.

தமது கடையைப் பூட்டிவிட்டு, அச்சுவேலி தெற்கில் உள்ள வீட்டிற்குப் புறப்பட்ட வேளை மோட்டார் சைக்கிளில் வந்த ஆயுததாரிகள் அவரை சுட்டுவிட்டுத் தப்பிச் சென்றனர் என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

மல்லாகம் நீதிவான் சம்பவ இடத்திற்குச் சென்று விசாரணைகளை நடத்தினார். பிரேத பரிசோதனையின் பின் சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைக்கும்படி அவர் உத்தரவிட்டார். (அ-1-15-78)

## கலாசார அலுவல்கள் அமைச்சு நடத்திய

# ஆக்கத்திறன் போட்டியில் பரிசில் பெற்ற அரசாங்க அலுவலர்களின் பெயர் விவரம்

யாழ்ப்பாணம்,செப்.6

கலாசார அலுவல்கள், தேசிய மரபுரிமைகள் அமைச்சினால் அகில இலங்கை ரீதியில் அரச ஊழியர்களுக்கு இடையில் நடத்தப்பட்ட ஆக்கத்திறன் போட்டிகளின் முடிவுகள் நேற்றுமுன்தினம் கொழும்பில் வெளியாகின.

சிறுகதை, பாடல், கவிதை, சிறுவர் கதை, மொழிபெயர்ப்பு ஆகிய போட்டிகளில் வெற்றி பெற்றவர்களின் விவரங்களை கலாசார அலுவல்கள், தேசிய மரபுரிமைகள் அமைச்சு நேற்று "உதயனுக்கு" அனுப்பிவைத்திருந்தது.

மேற்படி போட்டிகளில் பங்குபற்றி பரிசில் பெற்ற யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, வவுனியா ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த அரச அலுவலர்களின் பெயர், பரிசு, அலுவலக முகவரி ஆகிய விவரங்கள் வருமாறு:-

**சிறுகதை**

முதலாம் பரிசு: வேலாயுதன் சிவராஜா (உதவி அரச அதிபர் பணிமனை, தீவகம் வடக்கு, ஊர்காவற்றுறை), எட்டாம் பரிசு: செல்வி எஸ்.மனோகரி (மேல் நீதிமன்றம், யாழ்ப்பாணம்), ஒன்பதாம் பரிசு: திருமதி டி.பஞ்சாட்சரம் (கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி.), பதின்மூன்றாவது பரிசு: திருமதி நாகேந்திரன் (கரணவாய் பொன்னம்பல வித்தியாலயம்).

**கவிதை**

முதலாம் பரிசு: செல்வி ஆர்.காயத்திரி (பன்னாலை ஸ்ரீ கனகசபை அ.த.க. பாடசாலை), இரண்டாவது பரிசு: வி.வடிவழகையன் (உதவி அரச அதிபர் பணிமனை, தீவகம் வடக்கு, ஊர்காவற்றுறை), நான்காவது பரிசு: கே.கீயோமார் (புனித அந்தோனியார் கல்லூரி, ஊர்காவற்றுறை), ஐந்தாம் பரிசு: திருமதி கே.பி.சுரேந்தினி நவராஜா (புனித அந்தோனியார் கல்லூரி, ஊர்காவற்றுறை), எட்டாம் பரிசு: செல்வி பாலசுந்தரம் (பெரிய விளான் றோ.க.த. பாடசாலை), பத்தாவது பரிசு: செல்வி நடராஜா காந்தலீலா (புனித அந்தோனியார் கல்லூரி, ஊர்காவற்றுறை), பதினொராவது பரிசு: வி.நந்தகுமார் (வித்தியானந்தாக் கல்லூரி, முள்ளியவளை), பன்னிரண்டாவது பரிசு: திருமதி வி.புனிதவித்தாகன் (வடமராட்சி வடக்கு, பிரதேச செயலகம், பருத்தித்துறை), பதின்மூன்றாவது பரிசு: எஸ்.பத்மராஜா (புனித அந்தோனியார் கல்லூரி, ஊர்காவற்றுறை).

**பாடல்**

முதலாவது பரிசு: செல்வி ரேணுகா இரத்தினசிங்கம் (பிரதேச செயலகம், வேலணை), மூன்றாவது பரிசு: பி.கணேசதுரை (மகாஜனாக் கல்லூரி, தெல்லிப்பழை), நான்காவது பரிசு: திருமதி கே.கவிதா (ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணியம் வித்தியாலயம்), ஐந்தாவது பரிசு: வி.ஜெயபால் (வைத்தீஸ்வராக் கல்லூரி, யாழ்ப்பாணம்), ஏழாவது பரிசு: பி.விஜயகாந்தன் (மானிப்பாய் மகளிர் கல்லூரி), பதினொராவது பரிசு: என்.தர்மராசா (வவுனியா தமிழ் மத்திய ம.வி.), பதின்மூன்றாவது பரிசு:- வி.நந்தகுமார் (வித்தியானந்தாக் கல்லூரி, முள்ளியவளை).

**சிறுகதை**

முதலாம் பரிசு: வி.வைரவநாதன் (இந்து சமய கலாசாரத் திணைக்களம், கொழும்பு) மூன்றாவது பரிசு: திருமதி கஜநந்தினி வரதலோஜன் (கரம்பொன் சிறிய புஷ்பமகளிர் ம.வி. ஊர்காவற்றுறை) ஐந்தாவது பரிசு: திருமதி ரி.செம்மனச்செல்வி (இறம்பைக்குளம் அ.த.க. பாடசாலை, வவுனியா), ஆறாவது பரிசு: ஏ.எச்.அபுர்காசிம் (மதீனா வித்தியாலயம், மகாறம்பைக்குளம்) ஏழாவது பரிசு: எம்.நரேஷ்குமார் (தொழில்நுட்பக் கல்லூரி, வவுனியா) எட்டாவது பரிசு: எம்.ரி.நிரோசன் (பிரதேச செயலகம், சாவகச்சேரி), ஒன்பதாவது பரிசு: எம்.சிவராஜா (தண்ணீரூற்று அ.த.க. பாடசாலை முல்லைத்தீவு) பத்தாவது பரிசு: திருமதி ஜே.எம். ஆனந்தராசா (யாழ்ற்றன் கல்லூரி, காரைநகர்) பதினொராவது பரிசு: ஜெ.ஜெஸ்ரின் (பொது நூலகம், யாழ்ப்பாணம்).

மேற்படி போட்டிகளில் பரிசில் பெற்றவர்களுக்கான பரிசில் வழங்கும் நிகழ்வு எதிர்வரும் 17ஆம் திகதி அநுராதபுரத்தில் நடைபெறவுள்ளது.

சம்பந்தப்பட்டவர்கள் அங்கு நேரில் சமுகமளித்து பணப்பரிசில், பரிசில், சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்ளமுடியும்.

பரிசில் வழங்கும் விழா தொடர்பான அழைப்பிதழ்கள் சம்பந்தப்பட்ட அரச அலுவலர்களின் அலுவலக முகவரிகளுக்குத் தபால்மூலம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன என்று மேற்படி அமைச்சின் அலுவலர் ஒருவர் உதயனுக்குத் தெரிவித்தார்.

## உயிலங்குளம் பாதை நேற்றுத் திறக்கப்பட்டது

யாழ்ப்பாணம்,செப்.6

மன்னார் மாவட்டத்துக்கும் வன்னிக்கும் இடையிலான உயிலங்குளம் சோதனை நிலையம் ஊடாகப் போக்குவரத்து நேற்று இடம்பெற்றது. ஒரு வாரத்தின் பின்னர் இச் சோதனை நிலையம் ஊடாக பொதுமக்கள் பயணம் செய்தனர். லொறிகளும் பொருள்களுடன் சென்றன. (1)

## வைத்திய அதிகாரி அலுவலகங்களில் தடுப்பூசி ஏற்ற வசதி

யாழ்ப்பாணம்,செப்.6

யாழ்.மாவட்டத்தில் இயங்கும் சகல சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் மற்றும் யாழ்.போதனா வைத்தியசாலையில் குழந்தைகளுக்கான சகல தடுப்பூசிகளும் போடப்படுவதாக யாழ்.பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் அலுவலகத்தின் பிராந்திய தொற்று நோயியலாளர் டாக்டர் எஸ்.தேவநேசன் தெரிவித்தார். (1-51)

## கொக்குவில் சந்தியில் கிரனேட் வெடித்தது

யாழ்ப்பாணம்,செப்.6

கொக்குவில் சந்திப்பகுதியில் நேற்று முற்பகல் 11 மணியளவில் கிரனேட் ஒன்று வெடித்தது. கிரனேட் வெடித்த இடத்திற்கு அருகில் உள்ள வீட்டில் நின்ற பெண் ஒருவர் சம்பவத்தில் காயமடைந்தார்.

கொக்குவிலைச் சேர்ந்த நாகேஸ்வரன் காஞ்சனா (வயது-32) என்பவரே காயமடைந்தவராவார். அவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

படையினரின் கிரனேட் தவறுதலாக வீழ்ந்து வெடித்ததாக தகவல்கள் தெரிவித்தன. (அ-1)

# வன்னியில் சிக்கியுள்ள மீனவர்களை பாதுகாப்பாக அழைத்துவர முயற்சி

குருநகர்,செப்.6

கடந்த மாதம் 11ஆம் திகதி குடாநாட்டில் ஆரம்பமான மோதலின் போது யாழ்.குடாக் கடலில் மீன்பிடிக்கச் சென்று மீண்டும் யாழ். நகருக்கு திரும்பி வராத நிலையில் வன்னிப் பகுதியில் தங்கியுள்ள மீனவர்களை யாழ்ப்பாணத்துக்கு பாதுகாப்பாக அழைத்து வருவதற்கான முயற்சிகள் யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுவுச் சங்கங்களின் சம்மேளனத்தால் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தலைவர் சி.[illegible] தெரிவித்தார்.

குருநகரைச் சேர்ந்த 41 வள்ளங்களும் பாஷையூரைச் சேர்ந்த 6 வள்ளங்களும் அங்கு உள்ளன. குருநகரைச் சேர்ந்த 124 மீனவர்களும் பாஷையூர்ப் பகுதியைச் சேர்ந்த 27 மீனவர்களும் அங்கு உள்ளனர். இம் மீனவர்களின் நிலைமை தொடர்பாக யாழ். அரச அதிபர், கிளிநொச்சி அரச அதிபர் மற்றும் கிளிநொச்சி பரந்தன் கடற்றொழிலாளர் சமாசத்தலைவர் ஆகியோருடன் தொடர்பு கொண்டு மகஜர்கள் கையளித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார். மேலும் இம்மீனவர்களின் குடும்பத்தவர்களுக்கு நிவாரணம் வழங்க [illegible] கொள்ளப்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ப)

## வாகனங்களுக்கு டீசல் விநியோகம்

தென்மராட்சி,செப்.6

தென்மராட்சிப் பிரதேசத்தில் உள்ள பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் எரிபொருள் நிலையங்களில் வாகனங்களுக்கு டீசல் வழங்கப்பட்டு வருகிறது.

வாகனங்கள் நீண்ட வரிசையில் நின்று டீசல் பெற்றுக் கொண்டதைக் காணமுடிகிறது.

சாவகச்சேரி, தென்மராட்சி மேற்கு ஆகிய பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் எரிபொருள் நிலையங்களிலேயே வாகனங்களுக்கு டீசல் வழங்கப்படுகிறது. (117)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 60ஆவது பிறந்ததின வாழ்த்தும் பிரியாவிடை வாழ்த்தும்



**சுப்பிரமணியம் சுந்தரலிங்கம்**
(தலைமை எழுதுவினைஞர்)
தலைவர் காரியாலயம் - இலங்கை மின்சாரசபை - கொழும்பு

வற்றாத கங்கைபோல் வாழ்வெங்கும் குடும்பத்துடன் வளம்காண வாழ்த்துகிறேன் இந்நாளில் வளமோடு வாழ்கவென வாழ்த்துகிறேன்.

என்றென்றும் அன்புடன்
**க.இராஜேஸ்வரன்,**
*மூத்த மின் அத்தியட்சகர்.*

இலங்கை மின்சார சபை,
யாழ்ப்பாணம். (சி/50957)

# கண்ணீர் அஞ்சலி

எமது தர்மகர்த்தா சபையின் உறுப்பினர் **திரு.வி.அருளானந்தம்**
அவர்களின் அன்புச் சகோதரர்
நரம்பியல் சத்திர சிகிச்சை நிபுணர் பேராசிரியர்
**வி.குணானந்தம்**
அவர்கள் இறைவனடி சேர்ந்தமையையிட்டு துயருற்றிருக்கும் குடும்பத் தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன், அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

வண்ணை ஸ்ரீ விஸ்வலிங்க மகா கணபதி கோயில்
(பன்றிக் கோட்டுப் பிள்ளையார் கோயில்).
**தர்மகர்த்தா சபை.** (53568)


## COMPUTER EXPRESS
Institute of Information Technology
No 15, Sirambiyadi Lane, Jaffna.
Tel:- 021-2228250, 0777-222422

மாபெரும் புலமைப்பரிசில் திட்டம் ~ 2006

80% OFF

| | | |
|---|---|---|
| Diploma in Microsoft Office ~~5000~~ 1000/= Duration :- 3 Months | Diploma in Desktop Publishing ~~2500~~ 1450/= Duration :- 4 Months | Diploma in Web page Designing ~~3250~~ 1650/= Duration :- 4 Months |
| Diploma in Graphic Designing ~~3250~~ 1650/= Duration :- 4 Months | Diploma in Hardware Engineering ~~2500~~ 1450/= Duration :- 3 Months | Accounting Package ~~3250~~ 1650/= Duration :- 3 Months |
| Diploma in Computer Science ~~3250~~ 1650/= Duration :- 4 Months | Honors Diploma in Computer Science ~~10500~~ 2100/= Duration :- 6 Months | Diploma in Auto CAD ~~7500~~ 1450/= Duration :- 3 Months |

Advances Courses

50% OFF

| | | |
|---|---|---|
| Diploma in Video Editing | ~~6500~~ | 3250 |
| Diploma in Multimedia | ~~5500~~ | 2750 |

வகுப்புகள் ஆரம்பம் :-

| | |
|---|---|
| Batch I | 10/09/2006 |
| Batch II | 13/09/2006 |
| Batch III | 15/09/2006 |
| Batch IV | 16/09/2006 |


# நீங்கி விடாத நினைவலைகள்

ஈராண்டு | ஓராண்டு





அமரர்
**கதிரிப்பிள்ளை தம்பிப்பிள்ளை**
*தோற்றம்: 29.03.1938*
*மறைவு : 29.08.2004*

அமரர்
**தம்பிப்பிள்ளை அன்னப்பிள்ளை**
*தோற்றம் : 29.12.1946*
*மறைவு : 13.09.2005*

*எங்கள் குடும்ப விளக்குகள் அணைந்தாலும் - எங்கள் நெஞ்சங்களை விட்டு அகலாது !*
*உங்கள் ஆத்மா சாந்தி அடையட்டும் !*

(53569)

அளவெட்டி வடக்கு,
அளவெட்டி.
**மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள் மற்றும் உறவினர்கள்.**

# மரண அறிவித்தல்

## *திருமதி இராஜலட்சுமி பத்மநாதன்*

திருமதி இராஜலட்சுமி பத்மநாதன் அவர்கள் 03-09-2006 ஞாயிற்றுக்கிழமை இரவு கொழும்பில் காலமானார்.

அன்னார் உரும்பிராய், வேம்பன் வீதியைச் சேர்ந்த அமரர் பொன்னுத்துரை-பூரணம் தம்பதியரின் மகளும் நல்லூர் அமரர் இராமலிங்கம்-தில்லைராஜேஸ்வரி தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்ற பத்மநாதன் (பபா) அவர்களின் அன்பு மனைவியும் மகிந்தா, துஸ்யந்தன், ரம்யா, கபிலன் ஆகியோரின் அன்புத்தாயும் ஜெயந்தி, ஜெயந்தினி ஆகியோரின் மாமியும் புவனம், தம்பிராசா, இராசமணி, பரமேஸ்வரி (பாப்பா) ஆகியோரின் அன்புச்சகோதரியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் நாளை (07-09-2006) வியாழக்கிழமை மாலை 4 மணிக்கு கொழும்பில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*"தமிழகம்"*
*வேம்பன் வீதி,*
*உரும்பிராய் தெற்கு.* (53571)

தகவல்:
**ஆ.பரமேஸ்வரி** (பாப்பா)

# கடற்றொழில் பரிசோதகர் பதவிக்கு விண்ணப்பம்

யாழ்ப்பாணம்,செப்.6

கடற்றொழில், நீரியல் வளங்கள் திணைக்களம் வடக்கு - கிழக்கு பிரதேசங்களில் நிலவும் கடற்றொழில் பரிசோதகர் பதவிகளுக்கான விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

விண்ணப்பதாரிகள் அடுத்தமாதம் 16ஆம் திகதிக்கு முன்னர் பரீட்சை ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள் பிரிவு, இலங்கை பரீட்சைகள் திணைக்களம், பெலவத்தை, பத்தரமுல்லை என்ற முகவரிக்கு விண்ணப்பங்களை அனுப்பிவைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

மேற்படி விண்ணப்பங்கள் தொடர்பான மேலதிக விவரங்களை கோயில்வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கடற்றொழில் திணைக்களத்தின் யாழ். அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். (202)

# தீவுப்பகுதி போக்குவரத்து மீண்டும் வழமை நிலைக்கு!

தீவுப்பகுதி மக்களின் யாழ்.நகரப் பகுதிகளுக்கான போக்குவரத்துச்சேவைகள் மீண்டும் வழமைக்குத் திரும்பியுள்ளன.

கடந்த 24ஆம், 28 ஆம் திகதிகளிலும் பின்னர் 2 ஆம் திகதி வெள்ளிக்கிழமையும் ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்பட்ட போதும் தீவுப்பகுதிகளுக்கான போக்குவரத்திற்குப் படையினர் அனுமதி மறுத்திருந்தனர்.

மக்கள் போக்குவரத்துக்களை மேற்கொண்டுள்ள போதிலும் இ.போ.ச.பஸ் மற்றும் தனியார் சிற்றூர்திச் சேவைகள் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே இடம்பெறுகின்றன.

இதேசமயம் நெடுந்தீவுக்கான படகுச் சேவை நாளொன்றிற்கு ஒரு தடவை மட்டுமே நடைபெற்று வருகின்றது. காலையில் நெடுந்தீவில் இருந்து குறிகாட்டுவானுக்கு வரும் பயணிகள் படகு பி.ப. ஒரு மணிக்கு மீண்டும் நெடுந்தீவுக்குப் புறப்படுகின்றது. (111)

# சமய சந்நிதிகளில்

நவாலி அந்திரான் முருகமூர்த்தி கோயிலின் வருடாந்த தேர்த்திருவிழா இன்று புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு இடம்பெறும். தீர்த்தோற்சவம் நாளை வியாழக்கிழமை இடம்பெறும். (100)

* * *

கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன் ஆலயத்தின் இரதோற்சவம் இன்று நடைபெறவுள்ளது. காலை 8 மணியளவில் வசந்த மண்டபப் பூசையும் அதனையடுத்து காலை 9 மணியளவில் முருகப் பெருமான் வள்ளி தெய்வயானை சமேதரராக தேரில் ஆரோகணிப்பார்.சண்டேஸ்வரப் பெருமான் புதிதாக அமைக்கப்பட்ட தேரில் வீதியுலா வருவார் என்று தெரிவிக்கப்பட்டது. (1-79)

# செஞ்சிலுவைச் சங்க ஏற்பாட்டில் இரவு நேர அம்புலன்ஸ் சேவை

நல்லூர்,செப்.6

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளை, இரவு நேர அம்புலன்ஸ் போக்குவரத்துச் சேவையை நடத்தி வருகின்றது.

நாளொன்றுக்கு குறைந்தது 4 சேவைகள் நடைபெறுகின்றன என்றும் -

இரவு நேர அம்புலன்ஸ் சேவைக்கென பணியாளர்கள் தயாராக இருப்பதாகவும் யாழ். கிளையினர் தெரிவித்தனர். (111)

# பாலர் விளையாட்டு விழா

யாழ்ப்பாணம்,செப்.6

பாலர் கல்விக் கழகத்தின் நிர்வாகத்திலுள்ள ஸ்ரீ விக்னேஸ்வரா பாலர் பாடசாலையின் 14 ஆவது வருடாந்த விளையாட்டு விழா நாளை வியாழக்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை ஆசிரியை செல்வி ஜெயந்தினி கனகையா தலைமையில் நடைபெறும் இந்த விளையாட்டு விழாவில் ஓய்வு பெற்ற ஆரம்பப் பிரிவு ஆசிரிய ஆலோசகர் திருமதி கலாவதி பிரகதீஸ்வர சர்மா பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

# கூட்டம் ஒத்திவைப்பு

இன்று புதன்கிழமை நடைபெறவிருந்த யாழ்.பிரதி மாகாண சுகாதாரத் திணைக்களத் திற்குட்பட்ட நிறுவனங்களின் தலைவர்களுக்கான மாவட்ட கண்காணிப்புக்குழுக் கூட்டம் தவிர்க்க முடியாத காரணங்களால் பிற்போடப்பட்டுள்ளது என்று யாழ்.பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார். (202)


# அறிவித்தல்

## YAARL TECH SYS

- YAARL TECH SYSஇன் அனைத்து கணனி வகுப்புகளும் நடைபெறுவதால் ஏற்கனவே கல்வி கற்று பயிற்சியை நிறைவு செய்யாத மாணவர்களும், பயிற்சியை முடித்து இதுவரை சான்றிதழ் பெற்றுக்கொள்ளாத மாணவர்களும் எதிர்வரும் 12-09-2006 ஆம் திகதிக்கு முன் (செவ்வாய்க்கிழமை) அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்.
- அலுவலகநேரம் தினமும் 8.00 a.m.-1.00 p.m.
- குறித்த திகதிக்குப் பின் பிந்துவோருக்கு நிறுவனமோ நிர்வாகமோ பொறுப்பல்ல.

NO.03, KALADDY JUNCTION,
THIRUNELVELY. (53575)
-நிர்வாகம்.


# ஓராண்டு நினைவஞ்சலி



*அமரர்*
**கணபதி இராசரத்தினம்**
(சித்திரக்கலி அதிகாரியும், கலாபூஷணம், பிரதிமைக் கலைமாமணி, முன்னாள் யாழ்.பல்கலைக்கழக சித்திரமும் வடிவமைப்பும் துறை விரிவுரையாளர்)

*தோற்றம்* *06-01-1927*
*மறைவு* *06-09-2005*

**ஓராண்டு சென்றாலும் எம் நினைவுடன் என்றும் கலந்துள்ளீர்.**

நவாலி தெற்கு,
மானிப்பாய். (53436)
மனைவி, பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்.

# 7ஆம் ஆண்டு நினைவலைகள்

மண்மகிழ 13 - 06 - 1981
கண்ணெகிழ 25 - 08 - 1999



**செல்வி திருமகள் கனகசபை**
திதி: பூர்வபக்க சதுர்த்தசி

சந்நிதியான் அருளாலே வந்துதித்த திருமகளே!
எம் உயிரிலும் மேலான உடன்பிறப்பே!
எம்மை தவிக்கவிட்டு எங்கம்மா சென்றாய்
ஆண்டுகள் ஏழென்ன ஏழேழு ஜென்மம் எடுத்தாலும்
உன் நினைவுகள் எம் நெஞ்சைவிட்டு மறையாதம்மா
சந்நிதியான் அடி அழிக்க சென்ற உன்னை - கந்தன்
தன் சந்நிதியில் சேர்த்தது ஏனோ.
ஓம் சாந்தி

என்றும் உன் நினைவில்:
**குடும்பத்தினர்.**

மீசாலை வடக்கு,
மீசாலை. (சி/50959)


## COMPUTER EXPRESS
Institute of Information Technology
No 15, Sirampiyadi lane, Jaffna.
Telephone :- 021-2228250 , 0777-222422

முதன்முறையாக தமிழ்மொழி விளக்கத்துடன் ஒருவாரகால முழுநேர

**DIPLOMA IN HARDWARE ENGINEERING**
Course fee :- 2000/=

**DIPLOMA IN VIDEO MIXING**
Course fee :- 3000/=

**DIPLOMA IN GRAPHICS DESIGNING**
Course fee :- 2000/=

free study pack & drive CD

கற்கைநெறியின் நன்மைகள் :-
- பாடநெறியின் இறுதியில் 100% பூரண அறிவைப் பெற்றுக்கொள்வதற்கான உத்தரவாதம்
- கம்யூட்டரின் உட்தொழினுட்பம் பற்றி பூரண அறிமுகம் செய்வதால் கம்யூட்டர் தொடர்பான முன்னறிவு அவசியமில்லை.
- தராதரமும் நீண்ட அனுபவமும் கொண்ட விரிவுரையாளர்களால் கற்பிக்கப்படுகின்றது.
- 100% செய்முறைப் பயிற்சிகளுடனான விரிவுரைகளிற்கு உத்தரவாதம்.

வகுப்புகள் ஆரம்பம் :- 11-09-2006 : 08.30

கொழும்பிலிருந்து வருகைதரும் விரிவுரையாளரால் வகுப்புக்கள் நடாத்தப்படும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரங்கள்

### தவறிவிட்டது

145, ஸ்ரான்லி வீதி, அத்தியடியைச் சேர்ந்த கந்தையா பசுபதி என்பவரின் விசேட அ.அட்டை (0901011008), பசுபதி கனகம்மா என்பவரின் தேசிய அ. அட்டை (347822334V) என்பன 03.08.2006 அன்று ஊர்காவற்றுறைக்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேற்கூறிய முகவரியில் ஒப்படைத்து உதவவும். (53572)

## காணமற்போன அடிகளாருக்காகப் பிரார்த்தனை

வலி.தென்மேற்கு,செப்.6

அல்லைப்பிட்டி பங்குத் தந்தை அருட்திரு. ஜிம்பிறவுன் அடிகளாரும் அவரது உதவியாளரும் கடந்த மாதம் 20 ஆம் திகதியன்று அல்லைப் பிட்டிக்குச் சென்ற வேளையில் காணாமற்போனதைக் கண்டித்தும், அவர்களுக்கு இறை ஆசிவேண்டியும் சில்லாலை பங்கு மக்களால் சில்லாலை புனித கதிரை மாதா ஆலயத்தில் நாளை வியாழக்கிழமை அடையாள உண்ணாவிரதமும், மௌனப் பிரார்த்தனையும் நடத்தப்படவுள்ளன.

சில்லாலைப் பங்குத்தந்தை அருட்திரு. ஜ.ஜூட் நிக்சன் தலைமையில் இந்த நிகழ்வு நடைபெறும். இதேவேளை- இளவாலை மறை மாவட்ட பிரதேசத்திலுள்ள ஏனைய கத்தோலிக்க ஆலயங்களிலும் இதுபோன்ற உண்ணாவிரதமும் மௌனப் பிரார்த்தனையும் பரவலாக நடைபெற்று வருவது தெரிந்ததே. (ப-17[illegible])


**THE ROYAL COLLEGE OF JAFFN[illegible]**

தரம் 1இல் சேரவிருக்கும் மாணவர்களுக்கு ஆங்கிலம், தமிழ் விசேட வகுப்புகள். பட்டப்படிப்பு வரை ஆங்கில வகுப்புகள். 426(302), காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம், சிவன் கோயில் அருகில். "The Royal is The Best" (53579)


### தவறிவிட்டது

ஆராவத்தை, சுன்னாகத்தைச் சேர்ந்த யோசவ் தவராசா டெய்சி என்பவரது தேசிய அடையாள அட்டை 02.09.2006 அன்று யாழ். நகரப் பகுதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள்

தொடர்பு: வி.மேரித்திரேசா,
36/3, கோவில் வீதி, யாழ்ப்பாணம்.
(53570) (தொ.பே.இல.: 8409)


## மெலிந்த சரீரத்திற்கு வலிமையான வளர்ச்சி

APPETON
WEIGHT GAIN™
சக்திமிகு பால்மா பானம்

வளர்ந்தவர்க்கும் பிள்ளைகளுக்கும்

எல்லா சிறப்புச் சந்தைகளிலும் நாடெங்கும் மருந்தகங்களிலும் விற்பனையாகின்றது.




ஏக பிரதிநிதிகள்
Suri Trading Company (Pvt) Ltd
Hotline: 0114810 251

the ad factory


## 10 ஆம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம் 24 - 10 - 1972



மறைவு 06 - 09 - 1996

### செல்வன் இரத்தினம் ஜெயன்

(யாழ். பல்கலைக்கழக மாணவன்)

ஆண்டுகள் பத்து ஆனாலும் அகலாத நினைவுகளாய்
உம் ஞாபகங்கள் எம்முன் அலை மோதுதைய்யா!
கள்ளமில்லா வெள்ளை மனமும் புன்னகை பூத்த
பாலக முகமும் சிரித்து கதைபேசி சேர்ந்திருந்த
காலமெல்லாம் மறைந்ததேனோ?
எம் குடும்ப விளக்காய் அம்மாவும் நீரும் இருந்த
காலங்களை நினைத்து கண்களை நிறைக்கின்றோம்
மின்னலாய் உங்களை ஒரு பொழுதும் நாம் எண்ணவில்லை
ஆண்டுகள் தான் பல அகலும் - அகலாது
உம் ஞாபகங்கள் எம் நெஞ்சைவிட்டு
நொந்து போன இதயத்தோடு விதியை
நினைத்து நினைவு கூருகின்றோம்.

"திரிபுரவாசம்"
கைதடி மேற்கு, கைதடி. (53555)
குடும்பத்தினர்.

நடமாடும் வீட்டில் படமாகிப் போன எங்கள் இதயத் தெய்வத்தின்

## முதலாம் ஆண்டு நினைவாஞ்சலி

மண்மகிழ 20 ★ 02 ★ 1953



கண்நெகிழ 18 ★ 08 ★ 2005

### அமரர் கனகரெட்ணம் ஜெயராஜசிங்கம்

திதி: 06.09.2006

என் ஆசைத் தெய்வமே! எம்மை விட்டுப் பிரிந்து ஓராண்டாய்ப் போச்சுதே. தனிமரமாய் தவிக்கவிட்டு தவிப்பினிலே வாழவைத்து நினைவுகளை மட்டும் எனக்கு நிறைவாய் விட்டுச் சென்றீரே! முடியவில்லையே உமைப் பிரிந்து வாழ. உமது உயிரின் ஆத்ம உணர்வுகள் எங்கிருந்தாலும் அமைதி பெற ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றேன்.

58, அரச வீதி,
நல்லூர். (53550)
பாசமுள்ள மனைவி
மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 05 - 10 - 1968



மறைவு 08 - 08 - 2006

### திருமதி பரமேஸ்வரன் அருணாதேவி

08.08.2006அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவியின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று [06.09.2006] புதன்கிழமை வில்லூன்றித் தீர்த்தக்கரையிலும் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் நாளை [07.09.2006] வியாழக்கிழமை எமது இல்லத்திலும் நடைபெறும். இந்நிகழ்வுகளிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கோப்பாய் மத்தி,
கோப்பாய். (53546)
- குடும்பத்தினர்.

## அகம்மகிழ்ந்து வாழ்த்துகின்றோம்



### சுப்பிரமணியம் சுந்தரலிங்கம்

(கோண்டாவில்)

கடந்த 37 வருடங்களாக இலங்கை மின்சார சபையில் எழுதுவினைஞராக - பிரதம எழுதுவினைஞராகப் பணியாற்றி இன்று [06.09.2006] தமது தன்னலமற்ற சேவையிலிருந்து இளைப்பாறிச்செல்லும் உன்னத சேவையாளன் சுப்பிரமணியம் சுந்தரலிங்கம் அவர்களை இதயம் குளிர்ந்து மனதார வாழ்த்துகின்றோம்.

இலங்கை மின்சார சபையின் கொழும்பு தலைமை அலுவலகம், யாழ். பிரதேச அலுவலகம், சுன்னாகம் மத்திய மின் நிலையம், ஆக்கவேலைப்பகுதி [யாழ்.] ஆகியவற்றில் சிறப்புற சேவையாற்றிய இவர், இறுதியாக இலங்கை மின்சார சபையின் கொழும்பு தலைமை அலுவலகத்தில் [தலைவர் அலுவலகம்] பிரதம எழுதுவினைஞராகக் கடமையாற்றி [பொது மக்களினதும் அதிகாரிகளினதும் நன்மதிப்பைப் பெற்று] இன்று சேவையிலிருந்து ஓய்வுபெறுகின்றார்.

அன்னாரது ஓய்வுக்காலம் சிறப்பாக
அமைய எங்களது குலதெய்வங்களை வேண்டிநிற்கும்:
"என்றும் செய்நன்றி மறவாத"
குடும்ப நண்பன்,
உடன் பிறவாச் சகோதரன்.

(53[illegible])

## சின்னக்கடையில் மீன், இறால் விற்பனை

குருநகர், சின்னக் கடைப் பொதுச்சந்தையைச் சூழவுள்ள வீதிகளில் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் மீன், இறால் விற்பனை நடைபெறுகிறது. நாவாந்துறைக் கடற்பகுதியில் மீன் பிடிப்பதற்குப் படையினர் அனுமதி வழங்கியதனால் இங்கு மீனவர்களால் பிடிக்கப்படும் மீன் வியாபாரிகளால் எடுத்துவரப்பட்டு விற்பனைசெய்யப்படுவதாக குருநகர் பொதுமக்கள் தெரிவித்தனர்.

எனினும், சந்தைப்படுத்தப்படும் கடலுணவுகள் உச்ச விலையில் விக்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது. (ப-51)

## சிகிச்சைப்பிரிவுகள் இடமாற்றம்

தெல்லிப்பழை உயர் பாதுகாப்பு வலயப் பகுதியிலுள்ள மாவட்ட அரசினர் வைத்தியசாலை கட்டடத்தில் இயங்கி வந்த வெளிநோயாளர் சிகிச்சைப் பிரிவும் மற்றும் கிளினிக்குகளும் தற்போது தெல்லிப்பழை துர்க்காபுரத்திலுள்ள மேற்படி வைத்தியசாலைக்கு இடமாற்றம் செய்யப்பட்டு இயங்கிவருகின்றன. இதனால் இங்கு சிகிச்சை பெற வரும் நோயாளர் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் [illegible] (ப-135)

## மரண அறிவித்தல்கள்

### தம்பிராசா அந்தோனிப்பிள்ளை (சேபரட்ணம்)

(முன்னாள் கிராமசபை உறுப்பினர், கொக்குவில் மேற்கு)



உயரப்புலம், ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிராசா அந்தோனிப்பிள்ளை அவர்கள் 04.09.2006 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிராசா-மேரி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - தங்கச்சியம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் திரேசம்மாவின் பாசமிகு கணவரும் சூசைப்பிள்ளை, காலஞ்சென்ற றோசாமலர், சிமியோன் (பாபு), தேவராசா, அக்கினேஸ் (கனடா), ஆகியோரின் அன்புச் சகோதரனும் பிரான்சிஸ்கம்மா (லண்டன்), பிரான்சிஸ் (ஜேர்மனி), ஞானசோதி (ஜேர்மனி), ஞானராணி, அன்ரன் விஜயகுமார் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் அமலதாஸ் (லண்டன்), றோஸ்மலர் (ஜேர்மனி), அலன்ரோஸ் (ஜேர்மனி), மனோகரசீலன், தனுசா (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனும் அறிவழகன், தாஸ், டயானா, டயானி, டர்சினி, டெனிஸ்ரலா, தினேஸ், பிரதீப், நிரோஜன், சுபரேகா, சுரேன், சுலக்சனா, அஜீவன், டிலானி, அஸ்விதா, அஜய் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (06.09.2006) புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில் ஆனையூர் சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

உயரப்புலம்,
ஆனைக்கோட்டை,
T.P.No.: 021 222 9580 (53565)
தகவல்:
அ.மனோகரசீலன்
(மருமகன்).

### திருமதி மங்கையர்க்கரசி விசுவநாதன்

நல்லூரைப் பிறப்பிடமாகவும் இந்தியாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மங்கையர்க்கரசி விசுவநாதன் அவர்கள் 03.09.2006 இல் இந்தியாவில் காலமானார்.

அன்னார் விசுவநாதனின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற அப்புத்துரை - கனகம்மா தம்பதியரின் அன்பு மகளும் விஜியநந்தினியின் (லண்டன்) தாயும் அமலனின் மாமியும் சோமசேகரம் (இளைப்பாறிய தபால் ஊழியர்), காலஞ்சென்ற உருத்திரராசா, மனோகரன் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இந்தியாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

111/3, கோயில் வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம். (53567)
தகவல்:
A.சோமசேகரம் பரமேஸ்வரி
(சகோதரன்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

தொலைபேசி, தொலைநகல் - 222 9944, 222 9933, 222 3837

# ரணிலுக்கு தமிழர்கள் புகட்டிய அரசியல் பாடம் சரியானதுதான்

கடந்த ஜனாதிபதித் தேர்தலை ஈழத் தமிழர் தாயகம் பங்குபற்றாமல் பகிஷ்கரித்தமை குறித்துப் பலருக்கும் ஆதங்கம். அப்படிப் பகிஷ்கரிக்கும் நிலைப்பாட்டைத் தமிழர் தரப்பு எடுக்காமலிருந்திருந்தால் தேர்தல் முடிவு மாறியிருக்கும், எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாகியிருப்பார் என்றெல்லாம் பலரும் கருதுகின்றனர். அந்தக் கருத்தில் உண்மையும் இருக்கலாம்.

ஆனால், இப்போது நடக்கின்றவற்றைப் பார்த்தால் 'ஆட்டுக்கு வாலை ஆண்டவன் அளவோடுதான் படைத்தான்' என்பது போல ரணிலுக்கு அப்படிக் கிடைக்காமல் செய்வதை ஆண்டவன் ஆட்டுக்கு அளந்தது போல, தமிழர்களும் அளந்துதான் வெட்டினார்களோ என்று எண்ணத் தோன்றுகின்றது.

நாடாளுமன்றத்தில் குழுக்களின் பிரதித் தலைவர் தெரிவு விவகாரத்தை ஒட்டி எதிர்க்கட்சித் தலைவரும், ஐக்கிய தேசியக் கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க நடந்து கொண்டிருக்கும் விதத்தைப் பார்க்கும்போது அவர் விடயத்தில் தமிழர்கள் அளந்துதான் நடக்க வேண்டியவர்களாக இருக்கின்றார்கள் என்பது தெளிவாகியிருக்கின்றது.

அப்பதவி சிறுபான்மைத் தமிழர் ஒருவருக்கு - அதுவும் ரணிலின் கட்சியான ஐ.தே. கட்சியைச் சேர்ந்த தமிழர் ஒருவருக்கு - கிடைப்பது உறுதியாக இருந்தபோதும் அப்படித் தமிழர் ஒருவ்ருக்கு அப்பதவி கிடைக்காமல் வெட்டிச் சாய்த்த கட்சித் தலைவரின் போக்கைப் பார்க்கும்போது, அவர் விடயத்தில் தமிழர்கள் முழு நீதி, நியாயமாகவே நடந்திருக்கின்றார்கள் என்பது உறுதியாகியிருக்கின்றது.

'கூரை ஏறிக் கோழி பிடிக்க முடியாதவன் வானம் ஏறி வைகுண்டம் போவேன் என்றானாம்' - என்ற கதை போன்று நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவர் பதவித் தெரிவிலேயே சிறுபான்மை இனத்தவர்களான தமிழர்களுக்கு அதைக் கிடைக்கவிடாமல் 'வெட்டிய' ரணில் விக்கிரமசிங்க, சிறுபான்மை இன மக்களுக்கு இனப்பிரச்சினை விவகாரத்தில் நியாயத் தீர்வு பெற்றுத்தருவார் என்று எதிர்பார்த்தால் அதை விட முட்டாள் தனம் வேறு இருக்க முடியாது. அதையே நிரூபித்து வருகிறார் ரணில்.

நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவர் பதவியை இதுவரை இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் சச்சிதானந்தனே வகித்து வந்தார். ஆனால், அவரது கட்சி ஆளும் தரப்புடன் இணைய, பிரதி அமைச்சர் பதவியை ஏற்பதற்காக சச்சிதானந்தன் குழுக்களின் பிரதித் தலைவர் பதவியை இராஜினாமாச் செய்தார்.

அந்த இடத்துக்குப் புதியவர் ஒருவரைத் தெரிவு செய்ய வேண்டிய நிலை எழுந்தது.

அதுவரை அப்பதவி சிறுபான்மை இனத்தவர் பக்கம் இருந்ததால் அதே இனத்தைச் சேர்ந்தவரான - தமிழரான - ஒருவருக்கே அதை வழங்குவது பொருத்தமானது என்று பலரும் சுட்டிக்காட்ட அதை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஏற்றுக் கொண்டார்.

அதன் காரணமாக அப்பதவியை ஐ.தே. கட்சியின் எம்.பியான மகேஸ்வரனுக்கு வழங்கலாம் என்று ஜனாதிபதி மஹிந்தவே யோசனை வெளியிட்டார் எனத் தெரிகின்றது. எனினும், ஆளும் தரப்பில் சிலர் அதனை ஆட்சேபித்தனர்.

சபாநாயகர் பதவி, ஐ.தே.கவைச் சேர்ந்த லொக்கு பண்டாரவிடம். பிரதி சபாநாயகர் பதவி மக்கள் ஐக்கிய முன்னணியின் கீதாஞ்சன குணவர்த்தனவிடம். இந்நிலையில் அடுத்து குழுக்களின் பிரதித் தலைவர் பதவியும் ஐ.தே.கவைச் சேர்ந்த மகேஸ்வரனிடம் செல்வதா என்று ஆளும் தரப்பில் சு.கவின் எம்.பிக்கள் சிலர் முறுகினராம். ஆனால், அந்த எதிர்ப்பை எல்லாம் ஒதுக்கி விட்டு மகேஸ்வரனை அப்பதவியில் அமர்த்த உறுதியாக நின்றாராம் ஜனாதிபதி மஹிந்த.

ஆனால், மகேஸ்வரனுக்கு அவரது கட்சியின் தலைவரே அப்பதவி கிடைக்காமல் வேட்டுவைத்தார் என இப்போது உள்வீட்டுத் தகவல்கள் வெளியாகியிருக்கின்றன.

அப்பதவிக்கு ஐ.தே.கவின் சார்பில் மகேஸ்வரன் நிறுத்தப்படுவதை கடைசி நேரம்வரை இடம்பெறாமல் திட்டமிட்டுத் தடுத்து, அப்பதவி ஜே.வி.பி. ஒருவரின் கைக்குப் போக வழிசெய்து மகிழ்ந்திருக்கின்றார் ரணில் விக்கிரமசிங்க.

அப்பதவிக்கு ஐ.தே.கவின் சார்பில் மகேஸ்வரன் நிறுத்தப்பட்டால், அதனை ஆளும் தரப்பும் ஆட்சேபிக்காமல் ஏற்று அங்கீகரிக்கும் என்று ஆளும் தரப்பு முடிவு செய்திருந்தமை நன்கு தெரிந்திருந்தும் -

அவ்வாறு மகேஸ்வரனை அப்பதவிக்கு நிறுத்தும் தீர்மானத்தை ஐ.தே.கட்சியின் நாடாளுமன்றக் குழு இறுதி நேரம் வரை எடுக்காமல் இருப்பதை உறுதிசெய்துகொண்டு, அவ்வாறே ஆளும் தரப்புக்குத் தகவலும் தெரிவித்திருக்கின்றது ஐ.தே.க. தலைமை.

அதனால், மகேஸ்வரனை விட்டு வேறு ஒருவரை அப்பதவிக்கு நிறுத்தும் நிலை ஆளும் தரப்புக்கு ஏற்பட்டது.

தனது கட்சியில் இருக்கும் இலங்கைத் தமிழர்களின் ஒரேயொரு எம்.பியான மகேஸ்வரனுக்கே, இனவாத அடிப்படையில் இவ்வாறு வேட்டு வைக்கும் ரணில் விக்கிரமசிங்க, ஈழத் தமிழரின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் அதிகாரமும், பொறுப்பும், பதவியும் தமக்கு வழங்கப்பட்டிருந்தால் அதை எப்படிக் கையாண்டிருப்பார்?

அதை ஊகிப்பது தமிழர்களுக்கு அவ்வளவு ஒன்றும் கஷ்டமான விடயம் அல்ல. அதனால்தான், கடந்த ஜனாதிபதித் தேர்தலில் அவ்வளவு தீர்க்கமாக - உறுதியாக - திடமாக - தெளிவாக - நடந்து, ரணிலுக்கு உரிய பாடம் புகட்டினார்கள் தமிழர்கள்.

தமிழர்களின் அந்த நடவடிக்கை முற்றிலும் சரியானதே என்பதை இப்போதும் தமது செயற்பாடுகள் மூலம் நிரூபித்து வருகின்றார் ரணில். அவ்வளவே!

# குழுக்களின் பிரதித் தலைவர் பதவி இழுபறிக்குப் பின்னர் ஜே.வி.பியிடம்

## நாடாளுமன்றம் 3 முறைகள் ஒத்திவைப்பு

கொழும்பு, செப்.6

நீண்ட வாதப் பிரதிவாதங்களுக்குப் பின்னர் குழுக்களின் பிரதித் தலைவராக ஜே.வி.பியைச் சேர்ந்த பியசிறி விஜேநாயக்க நேற்றுப் பகல் 12.10 மணியளவில் நாடாளுமன்றத்தில் ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டார்.

ஜே.வி.பியின் எம்.பியான பியசிறி விஜே நாயக்கவின் பெயரை ஐ.ம.சு. முன்னணிப் பொதுச் செயலாளரும், அமைச்சருமான சுசில் பிரேம்ஜயந்த பிரேரித்தார்.

அவர் பிரேரிக்கும்போது பிய சிறிவிஜே நாயக்க குறிப்பிட்ட காலத்துக்கே பதவி வகிப்பார். பின்னர் இராமலிங்கம் சந்திரசேகரன் இப்பதவிக்குத் தெரிவு செய்யப்படுவார் எனத் தெரிவித்தார்.

பியசிறி விஜேநாயக்கவின் பெயரை ஜே.வி.பியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் விமல் வீரவன்ஸ வழிமொழிந்தார்.

குழுக்களின் பிரதித் தலைவர் தெரிவு குறித்து எழுந்த சர்ச்சை காரணமாக சபை நேற்று மூன்று தடவைகள் ஒத்தி வைக்கப்பட்டது.

நாடாளுமன்றம் நேற்றுக் காலை 9.30 மணிக்கு சபாநாயகர் டபிள்யூ. ஜே.எம். லொக்குபண்டா தலைமையில் கூடியது. சபையின் வழமையான நடவடிக்கைகளுக்குப் பின்னர் குழுக்களின் பிரதித் தலைவர் தெரிவுக்கான தேர்தல் நடைபெறுமென அறிவித்தார். அப்போது சபை முதல்வர் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா எழுந்து ஒரு பிரச்சினை இருக்கிறது. எனவே, சபையை 10 நிமிடங்களுக்கு ஒத்தி வைத்து கட்சித் தலைவர்கள் கூட்டத்தைக் கூட்டி ஒரு முடிவு எடுக்க வேண்டும் என்று தெரிவித்தார்.

சபை மீண்டும் கூடியபோது குழுக்களின் பிரதித் தலைவர் தெரிவை பிறிதொரு தினத்துக்கு ஒத்தி வைக்கிறார் என சபாநாயகர் அறிவித்தார். ஆளும் கட்சியின் பிரதம கொறடா அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே எழுந்து, அரசமைப்பின்படி குழுக்களின் பிரதித் தலைவர் தெரிவை ஒத்திவைக்க முடியாது. சபாநாயகர், பிரதி சபாநாயகர் குழுக்களின் பிரதித் தலைவர் ஆகிய பதவிகளிலொன்று வெற்றிடமாகக் காணப்படுமிடத்து அடுத்து வரும் நாடாளுமன்ற முதல் அமர்விலேயே அதற்கான தெரிவு நடைபெறவேண்டும் என்று அரசமைப்பில் தெளிவாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, தெரிவுக்கான வாக்கெடுப்பு இன்றே நடைபெற வேண்டும். வெளிநாடு சென்றுள்ள ஜே.வி.பியின் எம்.பி. இராமலிங்கம் சந்திரசேகரனின் பெயர் இப்பதவிக்காக முன்மொழியப்படவுள்ளதாலேயே தெரிவு

(06 ஆம் பக்கம் பார்க்க)

## அஞ்சலிக் கூட்டம்

யாழ்ப்பாணம்,செப்.6

இலங்கை செஞ்சிலுவைச் சங்க வலி.வடக்குப் பிரிவின் முன்னாள் தலைவர் அமரர் சி.சிவமகாராசாவின் நினைவாக அஞ்சலிக் கூட்டம் நடைபெறவுள்ளது.

கண்டி வீதியில் இயங்கும் சங்கத் தலைமையகம் நடத்தும் இந்த அஞ்சலிக் கூட்டம் எதிர்வரும் சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு சங்கத்தின் யாழ். கிளைக் காரியாலயத்தில் இடம் பெறும்.

(1-202)

# கிழக்கிலிருந்து புலிகளை முற்றாக விரட்டும் வரை சண்டையைத் தொடரக் கோருகிறார் வீரவன்ஸ



கொழும்பு, செப்.6

''எமது வீர முள்ள படையினர் சம்பூரைக் கைப்பற்றியுள்ளனர். இத்துடன் நிறுத்தாது கிழக்கு மாகாணத்திலிருந்து புலிகளை முற்றாக விரட்டியடிக்கும் வரையில் படை நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும்.''- என்று ஜே.வி.பி. நாடாளுமன்ற குழுத் தலைவர் விமல் வீரவன்ஸ நேற்று நாடாளு மன்றத்தில் விசேட அறிக்கையொன்றை விடுத்துப் பேசும்போது தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசும்போது கூறிய தாவது:-

''யுத்தத்துக்கு எதிரான அமைப்புகளும், கூலிகளான என்.ஜி.ஓக்களும் எதைக் கூறினாலும் அதைப் பொருட்படுத்தாமல் கிழக்கிலும், வடக்கிலும் புலிகள் வசமுள்ள பகுதிகளை மீட்டெடுக்கப் படை நகர்வுகளை மேற்கொள்ள வேண்டும்.

யுத்தத்தில் எவரும் வென்றதாகச் சரித்திரம் இல்லை என்று கூறுபவர்கள் யுத்தத்துக்கு எதிரான அமைப்பினரே. இதை எமது வீரம்மிக்க படையினர் பொய்யாக்கி விட்டனர்.

இது தமிழ் மக்களுக்கு எதிரான யுத்தமல்ல. தமிழ் மக்களைப் புலிகளின் பிடியிலிருந்து மீட்டெடுக்கும் யுத்தமாகும். இதை அனைவரும் உணர்ந்துகொள்ள வேண்டும்.

சம்பூரின் முக்கியத்துவத்தை உணர்ந்து யுத்தநிறுத்த ஒப்பந்தத்தின் பின்னர் புலிகள் அப்பகுதியைத் தம்வசம் கொண்டு வந்தனர். இப்போது புலிகள் சம்பூரிலிருந்து விரட்டியடிக்கப்பட்டு விட்ட னர்.

யுத்த நிறுத்த ஒப்பந்தக் காலத்தில் புலிகள் ஆயுதங்களைச் சேகரித்ததுடன் மனித பலத்தையும் அதிகரித்துக் கொண்டனர். இந்த நிலையிலும் எமது படையினர் தமது முழு உத்தியையும் பயன்படுத்திப் புலிகளை சம்பூரை விட்டு விரட்டியடித்துள்ளனர்.

இவ்வெற்றியைப் பெற்றுத் தந்த முப்படையினருக்கும், முப்படைத் தள பதிகளுக்கும், பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கும் , அதிகாரிகளுக்கும் நாம் நன்றி தெரிவிக்க வேண்டும்.'' - என்றார் வீரவன்ஸ. (க)

# தெற்கே செல்வதற்கு பதிவு செய்தவர்களை செயலகம் முன் இன்று கூடுமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம், செப்.6

யாழ்.மாவட்டத்திலிருந்து தென்பகுதிக்கு செல்வதற்கென கப்பல், விமானப்பதிவுகளை மேற்கொண்ட அனைவரையும் இன்று முற்பகல் 10.30 மணிக்கு யாழ்.மாவட்ட செயலகம் முன்பாக ஒன்று கூடுமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

தமது பயண ஏற்பாடு தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதை வலியுறுத்தும் வகையிலேயே இந்த வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளதாக கப்பல், விமானப் பதிவு மேற் கொண்டவர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெளிநாடுகளிலிருந்து வந்து மீளத்திரும்ப முடியாதுள்ளோர், விசா கிடைத்தும் பயணத்தை மேற்கொள்ள முடியாதுள்ளோர் மற்றும் தென்பகுதியில் கடமையாற்றும் அரச, அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளையே இன்றைய தினம் தவறாது சமுகம் தருமாறு- கோரப்பட்டுள்ளது. (அ-எ)

# கடலில் நிற்கும் வள்ளங்களை கரைக்கு கொண்டுவர அனுமதி வேண்டும்

## குருநகர் மீனவர் சங்கம் வேண்டுகோள்

யாழ்ப்பாணத்தில் மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கைகளின் காரணமாக கடந்த மாதம் 11ஆம் திகதியிலிருந்து குருநகர் இறங்குதுறையில் நங்கூரமிடப்பட்டுள்ள வள்ளங்கள், படகுகள், ட்ராலர்கள் யாவும் பழுதடையக்கூடிய நிலையடைந்துள்ளன. எனவே இந்த மீன்பிடிப் படகுகளை கடலிலிருந்து கரைக்கு கொண்டுவந்து பத்திரப்படுத்துவதற்கு மீனவர்களை அனுமதிக்க வேண்டும் என்று குருநகர் மீன்பிடி அபிவிருத்தி சங்கம், யாழ்ப்பாணம் 512 ஆவது பிரிகேட் தளபதியைக் கேட்டுள்ளது.

நங்கூரமிடப்பட்ட சில படகுகளும் வள்ளங்களும் கடலில் மூழ்கிவிட்டதாகவும் தென்மேல் பருவக்காற்றினால் சில படகுகள் அலையினால் அடித்து செல்லப்படுவதாகவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. அமிழ்ந்து போயுள்ள படகுகள் கடல் அடியில் [illegible] சேதமடைவதாகவும் , அவைகளை திருத்துவதற்கு அதிக செலவு ஏற்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ப-51)

# செல்வச் சந்நிதி முருகனுக்கு இன்று தேர்த் திருவிழா



தொண்டைமானாறு.செப்.6

. சரித்திரப் பிரசித்தி பெற்ற தொண்டைமானாறு செல்வச் சந்நிதி முருகன் ஆலயத் தேர்த் திருவிழா இன்று முற்பகல் நடைபெறவுள்ளது.

அன்னதானக் கந்தன் எனத் துதிக்கப்பட்டுவரும் செல்வச் சந்நிதி ஆலயத்தில் இன்று முற்பகல் 10 மணியளவில் மூன்று தேர்களில் சுவாமிகள் வீதிவலம் வருவர். ஊரடங்குச் சட்டம் இன்றும் பன்னிரண்டு மணிநேரம் நீக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுவதால் வலிகாமம் பகுதியிலிருந்தும் பக்தர்கள் பெரும் எண்ணிக்கையில் வருவர் என எதிர்பார்க்கப்படுகிறது.

அதனை முன்னிட்டு கூடுதல் பஸ் சேவைகளும், தனியார் பஸ் சேவைகளும் நடைபெறும் என அறிவிக்கப்படுகிறது.

நாளைய தீர்த்தத் திருவிழா காலை 8.30 மணியளவில் நடைபெறும்.

நேற்று நடைபெற்ற சப்பரத்திருவிழாவில் ஆயிரக்கணக்கில் பக்தர்கள் பங்குபற்றினர். வரணிப் பிரதேசங்களில் இருந்தும் அடியார்கள் வந்தனர். அவர்களில் பலர் இன்றைய தேர்த் திருவிழாவில் பங்குபற்றுவதற்காக ஆலயப் பிரதேசத்தில் தங்கி உள்ளனர். நேற்று ஆலயப் பகுதியில் படையினரின் எண்ணிக்கையும் அதிகரித்துக் காணப்பட்டது. (அ)

## சஞ்சலம் அகற்றும் சந்நிதி முருகன்

சந்நிதி வேலவனைச் சார்ந்தவர் மனதினில்
சஞ்சலம் அகன்றிடுமே - அவன்
பன்னிரு தோள்களும் பாதபங் கயங்களும்
பயவினை தீர்த்திடுமே
நாவினில் அவன்பெயர் நலமுடன் நவின்றிட
நல்வினை சேர்ந்திடுமே - அவன்
கோவிலைத் தினம்தினம் கும்பிட்டு வலம்வரின்
கொடுவினை அழிந்திடுமே

நேரினில் வரவிய லாதவர் தமக்கும்
நினைத்திட அருள்வருமே - அவன்
சீரிய குணநலன் கேட்டிடும் போழ்தினில்
செவிகளும் அமிழ்துறுமே
பூவர சில்உறை மாலவன் மருகனை
பணிந்திட நலம்வருமே - உம்பர்
தேவனை தானைத் தலைவனைச் சரண்புக
தேய்ந்திடும் பழவினையே

- கந்தவனம் கோணேஸ்வரன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்தமிழர் படுகொலைகளைக் கண்டித்து சேலத்தில் மாணவர்கள் ஆர்ப்பாட்டம்

ஈழத் தமிழர் படுகொலையைக் கண்டித்து சேலம் மாவட்டம் கொத்தாம்பாடி ஆத்தூர் ஜெம்கேட்ஸ் கலை மற்றும் அறிவியல் கல்லூரி மாணவர்கள் கடந்த சனிக்கிழமை பேரெழுச்சிமிக்க கண்டனப் பேரணியை நடத்தினர்.

ஜெம்கேட்ஸ் கல்லூரி வளாகத்திலிருந்து காலை 10.30 மணிக்கு கண்டனப் பேரணி புறப்பட்டு பிற்பகல் 2 மணிக்கு ஆத்தூரைச் சென்றடைந்தது. இப்பேரணியில் 500 மாணவ, மாணவிகள் பங்கேற்றனர். 50 வீதத்துக்கும் அதிகமான மாணவியர் திரண்டிருந்தனர்.

கொத்தாம்பாடி, செல்லியம்பாளையம், நரசிங்கபுரம், விநாயகபுரம், உடையார்பாளையம், இராணிப்பேட்டை மற்றும் புதுப்பேட்டை வழியாக ஆத்தூர் காமராஜர் சிலையை பேரணி சென்றடைந்தது.

மாணவ, மாணவியர் 12 கிலோ மீற்றர் தூரம் ஸ்ரீலங்கா அரசாங்கத்தைக் கண்டித்து கோஷங்களை எழுப்பிச் சென்றனர்.

பேரணியில் பங்கேற்ற மாணவ, மாணவியருக்கு வழிநெடுக பொதுமக்கள் நீர் மற்றும் குளிர்பானங்களை வழங்கினர்.

ஆத்தூர் காமராஜர் சிலை அருகே பேரணி நிறைவடைந்தபோது முல்லைத்தீவில் படு கொலை செய்யப்பட்ட 61 பாடசாலை சிறுமியருக்கு அகவணக்கம் செலுத்தப்பட்டது. தொடர்ந்து கண்டன உரைகள் நிகழ்த்தப்பட்டன.

பேரணியின் முடிவில் ஈழத்தில் நடைபெற்றுவரும் தமிழினப் படுகொலைகளை உடனடியாக நிறுத்த வேண்டும்; அமைதிப் பேச்சு மீண்டும் தொடங்கப்பட வேண்டும்; ஈழத்தமிழர்கள் அமைதியாக வாழ அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட வேண்டும். ஆகிய கோரிக்கைகள் வலியுறுத்தப்பட்டன. (த)

## கர்னாடகாவிலும் கண்டனக் கூட்டம்

சென்னை, செப்.6

இலங்கையில் தமிழ் மக்கள் மீதான அரச வன்முறைகளைக் கண்டித்து கர்னாடகாவில் நேற்று முன்தினம் கண்டனக்கூட்டம் ஒன்று நடைபெற்றிருக்கிறது.

பெங்களூர் தமிழ்ச் சங்கத் தலைவர் அண்ணாச்சி சண்முகசுந்தரம் இக்கூட்டத்துக்கு தலைமை வகித்தார். பெரியார் திராவிடர் கழகத் தலைவர் கௌத்தூர் மணி பேராசிரியர் இராசாமணி, மணிமொழி, தமிழக ஒடுக்கப்பட்டோர் விடுதலை இயக்கத்தின் பொழிலன், தமிழ்நாடு பேரவையைச் சேர்ந்த முகிலன் உட்படப் பலர் இதில் கலந்துகொண்டு கண்டன உரைகளை நிகழ்த்தினர். (த)

## முப்படைகள் உஷார் நிலையில்!

சம்பூரை இராணுவம் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்திருப்பதையடுத்து அங்கு பின்வாங்கி நிற்கும் விடுதலைப் புலிகள் நாட்டின் வேறு பகுதிகளில் தாக்குதல்களை நடத்தக் கூடும் என்பதால், நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் முப்படையினரை உஷார் நிலையில் வைப்பதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையில் நேற்றுக் கூடிய பாதுகாப்புச் சபையின் கூட்டத்தையடுத்து அரசு இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளது. முப்படைகளின் தளபதிகள், பாதுகாப்பமைச்சின் செயலாளர், பொலிஸ்மா அதிபர் உட்பட்ட பாதுகாப்புத்துறை முக்கியஸ்தர்கள் கலந்து கொண்ட இந்த மாநாட்டில் நாட்டின் பாதுகாப்புக் குறித்துத் தீவிரமாக ஆராயப்பட்டது.

## தமிழர்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சுட்டிக் காட்டினார். இலங்கை மத்திய வங்கியின் நிதிப் புலனாய்வுப் பிரிவின் கோரிக்கையின் பேரில் சட்ட மா அதிபர் இந்த விண்ணப்பத்தைத் தாக்கல் செய்திருந்தாரென்பது குறிப்பிடத்தக்கது.

மத்திய வங்கியின் பணிப்பின் பேரில் வங்கிக் கணக்குகள் ஒரு வாரத்துக்கு முடக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (க)

## முகமாலையில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முடியாத சூழ்நிலை ஏற்பட்டிருந்தது.

கடந்த 26 நாள்களாக முகமாலையிலேயே நிறுத்தப்பட்டிருந்த வாகனங்களை எடுத்து வருவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

அதன் முதற்கட்டமாக உரிமையாளர்களை வாகனப்பதிவு ஆவணங்கள் மற்றும் ஏனைய தொடர்புடைய ஆவணங்களுடன் இன்று கொடிகாமம் பொலீஸ் நிலையத்தில் சமுகமளிக்கும்படி அரச அதிபர் கேட்டுள்ளார்.

தேவைப்படும் மேலதிக விவரங்களை சமர்ப்பித்து வாகனத்தை பெற்றுக்கொள்வதற்கான ஏற்பாடுகளையும் மேற்கொள்ளுமாறு அரச அதிபர் கே.கணேஷ் கேட்டுள்ளார். (அ-1)

## இணைத் தலைமை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதனால் சர்வதேச சமூகத்தையும், இணைத் தலைமை நாடுகளையும் நன்கு அறிவுறுத்திய பின்னர் அரசு சம்பூரைக் கைப்பற்றும் முயற்சியில் இறங்கியது.

இப்போது சம்பூர் எமது கட்டுப்பாட்டில் இருக்கிறது. அங்கு புதைக்கப்பட்டிருக்கும் நிலக்கண்ணிகள் தற்போது அகற்றப்பட்டு வருகின்றன.

விரைவில் அங்கு மக்கள் மீளக்குடியமர்த்தப்படவுள்ளனர். சம்பூரில் முழுமையான யுத்தமொன்று நடைபெறவில்லை. அது யுத்தமென்று கூறப்படுவதை நாம் நிராகரிக்கின்றோம். பாதுகாப்புக் கருதியே நாம் இந்த நடவடிக்கைகளை மேற்கொண்டோம். பிரதேசமொன்றை கைப்பற்றுவது வெற்றியல்ல. சமாதானம்மூலம் தீர்வொன்றைக் காண்பதே வெற்றியாக இருக்கமுடியும்.

- இவ்வாறு கூறினார் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல. (உ)

## சம்பூருக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சண்டை நடைபெறும் பகுதிகளில் விமானத் தாக்குதல்களை நடத்துவதற்காக நேற்றுக்காலை கட்டுநாயக்கா விமான நிலையத்தில் இருந்து புறப்பட்ட 'கிபிர்' விமானம் ஒன்று இயந்திரக் கோளாறு காரணமாக ஓடுபாதையை விட்டு விலகியது என்று தெரிவிக்கப்படுகிறது. எனினும், விமானத்துக்கு சேதம் ஏற்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-12)

## காக்கைதீவில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காக்கைதீவு, ஆனைக்கோட்டைப் பகுதிகளில் மக்கள் பீதியடைந்தனர்.

சிலபகுதிகளில் இருந்து குடும்பங்கள் இடம்பெயர்ந்தன என்று தகவல்கள் தெரிவித்தன. (ஐ - 12)

## சம்பூரில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படுகாயமடைந்தனர்.

இராணுவ வட்டாரங்கள் இத்தகவலை வெளியிட்டன.

இதேசமயம், சம்பூர் பகுதியில் இடம்பெற்ற சம்பவங்களில் படுகாயமடைந்த ஐந்து படையினர் நேற்று பொலநறுவை வைத்தியசாலைக்கு எடுத்துவரப்பட்டு சேர்க்கப்பட்டனர்.

''சம்பூரை அரசுப் படைகள் கைப்பற்றியமை அரசுப் படைகளுக்கு கேந்திர முக்கியத்துவம் மிக்க பிரதேசத்தை மீட்ட வெற்றியாக இருக்கலாம். ஆனால், வேறு இடத்தில் அதற்குப் புலிகள் பதிலடி கொடுக்கும் வாய்ப்புகள் அதிகம் உண்டு.'' - என வெளிநாட்டுச் செய்தியாளர் ஒருவர் தமது செய்தியில் குறிப்பிட்டிருக்கிறார். (உ)

## யாழ்.குடாநாட்டில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்.மக்கள் பட்டினிச்சாவை சந்திக்க நேரிடும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

கடந்தமாதம் 11ஆம் திகதியிலிருந்து தொழில்துறையில்லாமல் ஏற்கனவே துன்பத்தை அனுபவிக்கும் மக்களை பட்டினிச்சாவை எதிர் நோக்கவைப்பது கொடூரமானது.

எனவே ஓரிரு கப்பல்களையாவது தடையின்றி யாழ். வந்தடைய அனுமதிக்கும்படி தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமைப் பீடத்தை மனிதாபிமானரீதியில் அன்பாக வேண்டுகின்றோம். தமிழ் மக்களின் நலனை கருத்திற் கொண்டு இந்த அவசர வேண்டுகோளை உடன் நிறை வேற்றுவீர்களென அன்புடன் எதிர்பார்க்கின் றோம் - என்றுள்ளது. (அ-1)

## முழு அளவில் யுத்தம் வெடித்தால் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பந்தத்தில் எழுதப்பட்டுள்ள இருதரப்பு கட்டுப்பாட்டு எல்லையை மீள் நிர்மாணம் செய்கிற அரசாங்கத்தின் முயற்சி இது.

சம்பூரிலிருந்துதான் திருகோணமலை துறைமுகத்துக்கு புலிகளால் அச்சுறுத்தல் என்பது அல்ல.

திருகோணமலை துறைமுகத்தை கட்டுபாட்டில் கொண்டு வரவோ- தாக்குதல் நடத்தவோ- அச்சுறுத்தவோ விடுதலைப் புலிகளுக்கு வேறு மார்க்கம் உண்டு. விடுதலைப் புலிகளிடம் வலுவான கடற்படை உள்ளது. தரைப்படையும் உள்ளது. விடுதலைப் புலிகள் தங்களது முப்படையையும் பாவித்து அத்தகைய தாக்குதலைச் செய்யும் வல்லமை உண்டு.

எனவே சம்பூர் இருப்பதனால் தான் திருகோணமலைக்கு அச்சுறுத்தல் என்பது ஒரு விதண்டாவாதம்.

கட்டுநாயக்க விமான தளத்தைப் புலிகளால தாக்க முடியுமெனில் வடக்கு-கிழக்கில் உள்ள இத்தகைய துறைமுகத்தை தங் களது மூன்று படைகளால் புலி களால் தாக்க முடியும்.

தற்போது நடைபெற்று வரு பவை மோதல்கள்-சண்டைகள். சமாதான ஒப்பந்தம் இன்னும் சிதைந்து போகவில்லை. அதைக் கடந்து ஒரு யுத்தம் உருவாகவில்லை.

யுத்தம் என்று வரும்போது தான் வலுச் சமநிலையைக் கண்டறியமுடியும். சமாதான ஒப்பந்தத்தின் கீழ்தான் இப்போது மோதல்கள்-சண்டைகள் நடை பெறுகின்றன. ஒரு முழு அளவிலான யுத்தம் வருகின்றபோது தான் யுத்தத்துக்கான உபாயங்களைப் பிரயோகிக்க முடியும்.

தமிழீழத்தை அடைவதற்கான ஒரு மூலோபாயத்தை- தந்திரோபாயத்தை புலிகள் பயன்படுத்துகின்ற வாய்ப்பானது யுத்த நிறுத்தத்தைக கடந்து யுத்தம் ஏற்படும்போதுதான் ஏற்படும். தற்போதைய மோதல்களிலோ- சண்டைகளிலோ வலுச்சமநிலையை பரிசோதிக்கமுடியாது. அதை நிரூபிக்கவும் முடியாது. எதிர்பார்ப்பதும் தவறானது.

யுத்தம் என்று ஒன்று வருமேயானால் அதனில் நிரூபிக்கலாம். யுத்தத்தில்தான் அதனை எதிர்பார்க்க முடியும். நான்கரை வருட காலமாக சமாதானத்தில் புலிகள் ஈடுபட்டிருந்தனர். நீண்டகால யுத்தத்தில் இருந்த மக்களை ஒரு சமாதானத்துக்கு புலிகள் தயார் படுத்தினர்கள்.

விடுதலைப் புலிகள் மேற்கொள்ளுகிற எத்தகைய ஒரு சமாதான சூழலுக்கும் உடன்படக்கூடிய மனப்பாங்கு மக்களிடத்தில் உருவாக்கப்பட்டுள்ளது. அத்தகைய மனப்பாங்கு கொண்ட மக்கள் பாரிய ஏமாற்றத்துக்குள்ளாகியுள்ளனர். எனவே யுத்தத்துக்கு போகக்கூடிய சூழ்நிலை உருவாகியுள்ளது.

யுத்தம் என்பது வருவதற்கு முன்பாக சர்வதேச சமூகத்தில் சில சாதகமான நிலைகளை அடைய வேண்டியதுள்ளது.

யுத்தத்துக்கு சார்பான தேசிய எழுச்சியானது தளத்திலும் புலத்திலும் தார்மீக ஆதரவளிக்கும் சர்வதேச சமூகத்திலும் ஏற்படுத்த வேண்டும். அப்போதுதான் யுத்த நிறுத்த எல்லைகளைக் கடந்து யுத்தம் வெடிக்க இயலும். அத்தகைய யுத்தமானது புலிகளின் வலுச் சமநிலையை வெளிப்படுத்தும்.

மக்கள் இந்தப் போரின் பங்காளிகள். இறுதிவெற்றியை நோக்கி இந்தப் போராட்டம் நகருகின்றபோது இறுதிவெற்றிக்கான பண்பு மாற்றத்தையும் அடைய வேண்டும். விடுதலை போராட்டம் என்கிற பரிமாணமானது அடுத்த கட்டமான தேசியப் போராட்டம் என்கிற பரிமாணத்தை அடைய வேண்டும். மக்கள் மயப்பட்ட போராட்டமாக மாறவேண்டும். அத்தகைய எழுச்சியானது யுத்தத்துக்கு முன்னர் நிகழ வேண்டியது மிகவும் அவசியமானது என்றார் கவியழகன். (ஐ)

## குழுக்களின் பிரதித் தலைவர் ...

(05ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஒத்திவைக்கப்படுகிறது.

தெரிவு நடைபெறும்போது முன்மொழி யப்பட்ட உறுப்பினர் சபையில் இருக்க வேண்டுமென சபை நிலையியற் கட்டளை யின் 35 ஆவது ஷரத்தில் கூறப்பட்டுள்ளது. எனவே, நிலையியற் கட்டளையின் 35 ஆவது ஷரத்தை இடைநிறுத்தி முன்மொழியப்பட்ட உறுப்பினர் இல்லாத நிலையிலேயே தெரிவை நடத்த முடியும். எனவேதான் நிலையியற் கட்டளைகளை இடைநிறுத்தும் பிரேரணையை முன்வைக்கின்றேன் என்றார்.

எதிர்க்கட்சியின் பிரதம கொறடா ஜோஸப் மைக்கல் பெரேரா இதற்கு எதிர்ப்புத் தெரி வித்தார். நிலையியற் கட்டளைகளை நினைத் தவாறு இடைநிறுத்த முடியாது. இதற்கு முறைப்படி முன்னறிவித்தல் கொடுக்க வேண்டும். இதுதான் இச்சபையின் நடைமுறை என்றார்.

**சர்ச்சை**

இந்த நிலையில் மீண்டும் சர்ச்சை எழுந் தது. மீண்டும் சபை ஒத்திவைக்கப்பட்டது. மீண்டும் சபை கூடியபோது சபாநாயகர் கட்சித்தலைவர்கள் கூட்டத்தில் நிலையியற் கட்டளையை இடைநிறுத்தாது தெரிவை நடத்தும்படி முடிவு செய்யப்பட்டதாகத் தெரிவித்தார். மேலும், சபையின் முக்கிய மூன்று பதவிகளில் ஒன்றை சிறுபான்மையினருக்கு வழங்குவதே சபையின் நடைமுறை என்றும் தெரிவித்தார். இதற்கு எதிர்ப்புத் தெரிவித்த ஐ.தே. கட்சி எம்.பி. மனோ விஜேரட்ண, அது நடைமுறை மட்டுமே. அரசிலமைப்பில் அவ்வாறு கூறப்படவில்லை என்றார். ஜாதிக ஹெல உறுமயவைச் சேர்ந்த அத்துரலியேரத்ன தேரரும் இக்கருத்தினை வலியுறுத்தினார்.

சபாநாயகர் தனது முடிவைத் தெரிவித்த பின்னரும் ஆளும் கட்சி பிரதம கொறடா ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே எழுந்து ஐ.தே.கட்சி சார்பில் யார் போட்டியிடப் போகிறார்கள் என்று கேள்வி எழுப்பினார். சந்தர்ப்பம் வரும்போது நாம் அதைத் தெரிவிப்போம் என்று மனோ விஜயரட்ன எம்.பி. பதிலளித்தார்.

அப்படியானால், முன்மொழியப்பட்ட உறுப்பினர் சபையில் இல்லாத நிலையில் தெரிவை நடத்த வழி செய்யும் வகையில் நிலையியற் கட்டளைகளின் 35 ஆவது ஷரத்தை இடைநிறுத்தி விட்டுத் தெரிவை நடத்துவோம். இந்த நிலையில் மீண்டும் சபையில் சர்ச்சை எழுந்தது. கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் எடுத்த முடிவை மலினப்படுத்தக் கூடாது என்று ஐ.தே.கவினர் வாதிட்டனர். நிலையியற் கட்டளையை இடைநிறுத்தும்படி இச்சபையில் முன்வைக்கப்பட்ட பிரேரணை குறித்து சபாநாயகர் தனது முடிவை அறிவிக்கவேண்டும் என்று அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளேயும், ஜே. வி.பியினரும் சபாநாயகரைக் கேட்டுக் கொண்டனர். நிலையியற் கட்டளைகளை இடைநிறுத்த அனுமதிக்காவிட்டால் இச்சபையின் நேரத்தை நீடிக்கும் வகையில் நிலையியற் கட்டளைகளை இடைநிறுத்த அனுமதிக்கமாட்டோம் என்று ஆளுந்தரப்பினரும், ஜே.வி.பியினரும் தெரிவித்தனர். இந்த நிலையில் சபாநாயகர் எதுவித முடிவையும் அறிவிக்காமல் கட்சித் தலைவர்களின் ஆலோசனையைப் பெறவேண்டும் எனக் கூறி மூன்றாவது முறையாக சபையை ஒத்திவைத்தார். மீண்டும் சபை 12.10 மணியளவில் கூடியபோது கட்சித் தலைவர்களின் கூட்டத் தில் தீர்மானிக்கப்பட்டபடி நிலையியற் கட்டளையை இடைநிறுத்தாமல் தெரிவு இடம்பெற்றது.


**VCM INSTITUTE**

**A/L 2006 Repeat**

இணைந்த கணித வகுப்பு நாளை வியாழன் 7.30 a.m

**மீள ஆரம்பம்**

**Arul Communications**

**அருள் கொம்**

- வெளிநாட்டு அழைப்புக்களுக்கான கட்டணம் ஒரு நிமிடத்திற்கு 10/= மட்டுமே
- Calling Card மூலம் வீடுகளில் இருந்து வெளிநாட்டு அழைப்பை பெறுவதற்கான கட்டணம் 6/=
- இணையத்தள சேவைகளையும் பெற்றுக் கொள்ளலாம்.

இல.01, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

T.P.: 021 222 3536, 021 222 7646

Fax: 021 222 7097


## மரண அறிவித்தல்

### குமாரசாமி கந்தசாமி (பத்தர்)

சந்தை வீதி, உடுப்பிட்டியைச் சேர்ந்தவரும் 105, சிவன் கோயிலடி, கன்னாதிட்டி பிரபல நகைத்தொழிலாளியுமான குமாரசாமி கந்தசாமி நேற்று (05.09.2006) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் றோசம்மாவின் அன்புக் கணவரும் மனோரஞ்சிதமலர், லோகநாயகி, அகிலாண்டேஸ்வரி, சச்சிதானந்தன், காலஞ்சென்ற சௌபாக்கியவதி (ஜெயா), கிருபாகரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் பாலபரமேஸ்வரன், செல்லத்துரை, விமலாதேவி, நந்தினி ஆகியோரின் அன்பு மாமனும் உஷாந்தி, நிஷாந்தன், நிஷந்தன், சுகன்ஜா, வினோஜா, டினேஸ், கரிஹரன், டனுஸ்காந் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.09.2006) புதன் கிழமை பி.ப 2 மணிக்கு நடைபெற்று பூதவுடல் வல்லை இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

சந்தை வீதி,
உடுப்பிட்டி.
தொ.பே.: 0602212904

தகவல்:
சச்சிதானந்தன் (மகன்)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறு[illegible]361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 06.09.2006 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org